**Selvarajah Kajendren**
Member of Parliament
Jaffna Electoral District &
Member of Foreign Relations
Committee of Tamil National Alliance.

Ground Floor, ISATE Complex,
Parameswara Junction, Thirunelvely,
Jaffna, Sri Lanka

பத்திரிகை அறிக்கை 05-08-2006

பிரதம ஆசிரியர் /பணிப்பாளர்

## தமிழ் தேசிய ஆதரவாளரும் மக்கள் வங்கி முகாமையாளருமான பொன் கணேசமூர்த்தி மீதான படுகொலைக்குக் கண்டனம்

தமிழ் தேசிய ஆதரவாளரும் யாழ்ப்பாணம் மக்கள் வங்கியின் காங்கேசன்துறை கிளை முகாமையாளருமான பொன் கணேசமூர்த்தி அவர்கள் வெள்ளிக்கிழமை காலை 04-08-2006 அனறு அலுவலகத்திற்கு உந்துருளியில் சென்று கொண்டிருந்தபோது அவரைப் பின்தொடர்ந்து சென்ற சிறீலங்கா இராணுவப் புலனாய்வுப் பிரிவினரின் கொலை வெறிக்கு இரையாக்கப்பட்டுள்ளார்.

யாழ் திருநெல்வேலி தபால்ப்பெட்டி வீதியில் வைத்து காலை 8.30 மணியளவில் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். இப்படுகொலையானது கோழைத்தனமான, படிப்பறிவற்ற சிறீலங்காப் படைகளின் காட்டுமிராண்டித்தனமான செயற்பாடாகும்.

யாழ் மாவட்டத்தில் ஜெனரல் சந்திரசிறி தலைமையிலான சிங்களப் படைகள் மேற்கொண்டுவரும் மனிதாபிமானமற்ற இத்தகைய படுகொலைகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மிக வன்மையாகக் கண்டிக்கின்றது.

இளமைக்காலம் தொடக்கம் தமிழ்த் தேசியத்திற்காக உழைத்து வந்த பொன் கணேசமூர்த்தி அவர்கள் தனது கலைப் படைப்புக்களூடாக மக்கள் மத்தியில் தமிழ்த் தேசிய எழுச்சியை ஏற்படுத்துவதற்காக அரும்பணியாற்றியுள்ளார்.

சிங்கள பௌத்த பேரினவாத அரசுகள் தாம் விரும்புகின்ற அரசியல் தீர்வினை தமிழ் மக்கள் மீது திணிக்க வேண்டுமென்பதற்காக நீண்டகாலமாக பெரும் பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகின்றது.

அதன் ஒரு அங்கமாக தமிழ் மக்கள் மத்தியில் தேசியத்திற்காக உழைத்துவரும் கல்வியாளர்களையும், சிந்தனையாளர்களையும் ஒழித்துக் கட்டுவதில் தீவிரம்காட்டி வருகின்றது.

அந்த வகையில் கடந்த பெப்ரவரி 24ல் ஜெனீவாப் பேச்சுக்கள் முடிவடைந்ததிலிருந்து 2006 யூலை 30 வரையான மூன்று மாதத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டும் 125 பொதுமக்கள் சிறீலங்கா இராணுவப் புலனாய்வுப் பிரிவினரின் கொலை வெறிக்கு இரையாக்கப்பட்டுள்ளனர்.

ஒரு புறத்தில் சமாதானப் பேச்சு வார்த்தையென்று சர்வதேசத்திற்கும் சிங்கள மக்களுக்கும் பூச்சாண்டி காட்டும் மகிந்த அரசு மறுபுறத்தில் அவசரகாலச் சட்டத்தினைப் பயன்படுத்தி தமிழ் மக்களை வகைதொகையின்றி கைதுசெய்து சித்திரவதை செய்து கொலை செய்வதிலும், சிறைகளிலடைப்பதிலும், கடத்திச் சென்று கொலைசெய்வதிலும், தமிழர் பிரதேசங்கள் மீது பொருளாதாரத் தடை விதிப்பதன் மூலமும் கடற்தொழிலுக்கு தடைவிதிப்பதன் மூலமும், மக்களை பட்டினிச்சாவிற்கு முகம்கொடுக்கச் செய்வதிலும், தமிழ் மக்களின் குடியிருப்புக்கள் மீதான விமானத்தாக்குதல்கள் மூலம் அவர்களது உயிர் உடைமைகளை அழிப்பதிலுமே முனைப்புக் காட்டிவருகின்றது.

Residence: 17th Mile Post, Karuvelankandal, Oddusuddan, Mullaitivu. Sri Lanka.
Mobile : 0094-773024316 Residence : 0094-212263089
Office : 0094-212223942 Email : skajendren@yahoo.com

**Selvarajah Kajendren**
Member of Parliament
Jaffna Electoral District &
Member of Foreign Relations
Committee of Tamil National Alliance.

Ground Floor, ISATE Complex,
Parameswara Junction, Thirunelvely,
Jaffna, Sri Lanka

இத்தகைய நடவடிக்கைகள் மூலம் இராணுவத் தீர்விலேயே அரசு இன்னமும் நம்பிக்கை கொண்டிருப்பதனையே வெளிப்படுத்தி வருகின்றது. இது ஒரு போதும் வன்முறையற்ற வழியில் இனப்பிரச்சினையை தீர்க்க உதவப் போவதில்லை என்பதனை மகிந்த அரசு புரிந்து கொள்வதாக இல்லை.

மகிந்த அரசு பதவியேற்றதிலிருந்து வடக்கு கிழக்கில் 800 ற்குமதிகமானவர்கள் அரச படைகளாலும் அதன் துணைக்குழுக்களினாலும் படுகொலை செய்யப்பட்டுள்ள போதிலும் இது வரையில் ஒரு கொலையாளி கூட சட்டத்தினால் தண்டிக்கப்படவில்லை.

மாறாக சிறீலங்காவின் சட்டங்களும் காவல்த்துறையும் மேற்படி கொலையாளிகளை பாதுகாப்பதிலேயே குறியாக உள்ளது.

எனவே வேலியே பயிரை மேய்கிறபொழுது தமிழ் மக்களின் உயிரைப் பாதுகாப்பதற்குள்ள ஒரே வழி தமிழர் தாயகப்பிரதேசத்திலிருந்து சிறீலங்கா ஆயுதப்படைகள் வெளியேறுவதனைத் தவிர வேறு வழியில்லை.

சமாதான வழி முறையில் பிரச்சினையை தீர்க்க தேசியத் தலைவரினால் வழங்கப்பட்ட அரிய சந்தர்ப்பத்தினை மகிந்த அரசு தவறவிட்டது மட்டுமல்ல தவறாகப் பயன்படுத்தியுமுள்ளது. அவர்களுக்குரிய காலம் கிட்டத்தட்ட முடிவடைந்து விட்டதாகவே எண்ணத் தோனறுதின்றது.

எனினும் எஞ்சியுள்ள மிகச் சொற்ப காலத்தினுள் அரசு தமிழ் மக்கள் மீதான அனைத்து வன்முறைகளையும் கைவிட்டு மக்கள் குடியிருப்புக்களிலிருந்து தமது ஆக்கிரமிப்புப் படைகளை முற்றாக வெளியேற்றி சமாதானத்தின் மீதான தமது பற்றுறுதியினை உடனடியாக வெளிப்படுத்துமாயின் விபரீதமான விளைவுகளை தவிர்க்க முடியும்.

இல்லையேல் நாலாம் (இறுதிக்)கட்ட ஈழப்போர் தீவிர மடைவதனையும், நாடு பிரிவதனையும் தென்னிலங்கையின் பொருளாதாரம் அழிவதனையும் தவிர்க்கவோ தடுக்கவோ முடியாத நிலையேற்படுமென்பதுடன்

வடகிழக்கிலுள்ள படையினரின் எதிர்காலமும் ஆபத்தானதாகவே அமையும்.

இவ்வண்ணம்

செ.கஜேந்திரன்
பாராளுமன்ற உறுப்பினர்
இலங்கை தமிழரசுக் கட்சி

Residence: 17th Mile Post, Karuvelankandal, Oddusuddan, Mullaitivu. Sri Lanka.
Mobile : 0094-773024316 Residence : 0094-212263089
Office : 0094-212223942 Email : skajendren@yahoo.com